මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/01/01/30/2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2025-12-19

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல. : 09/2025**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள் / மாவட்டச் செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் / பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு / நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் 2026 வருடத்திற்குள் செலவினங்களை மேற்கொள்வதற்கு அதிகாரமளித்தல் மற்றும் அரச செலவினங்களை முகாமைசெய்தல்**

## 01. செலவினங்களுக்கான அதிகாரமளித்தல்

2026 நிதியாண்டுக்கான செலவினங்களை அங்கீகரிக்கும் 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம், 2025.12.05 அன்று பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

2026 ஆம் ஆண்டில் அரசாங்க செலவினங்களைச் சமாளிக்க திரட்டு நிதியிலிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்புடைய அங்கீகாரங்களில் நிதி அமைச்சர் கையெழுத்திட்டுள்ளார். அதன்படி, 2026 ஆம் ஆண்டில் தொடர்புடைய அதிகாரம் கட்டண வவுச்சர்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களில் பின்வருமாறு பதிவு செய்யப்பட வேண்டும்.

அ) பொது அரச சேவைகள் - 2026 இன் 1 ஆம் இலக்க சாதாரண ஆணைப்பத்திரம்

ஆ) விஷேட சட்ட சேவைகள் - 2026 இன் 1 ஆம் இலக்க விசேட சட்ட ஆணைப்பத்திரம்

இ) முற்பண செயற்பாடுகள் - 2026 இன் 1 ஆம் இலக்க முற்பண ஆணைப்பத்திரம்

## 02. அரச செலவினம் மீதான முகாமைத்துவப் பொறுப்பு

02.1 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டமானது, சில ஆண்டுகளில் 7 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியை அடைவதற்கான முக்கிய உத்தியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை அடைவதையும், அதன் நன்மைகள் நாட்டின் அனைத்துப் பகுதிகள், சமூகங்கள் மற்றும் சமூகக் குழுக்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

02.2 வரவு செலவுத்திட்டத்தின் படி, ஆண்டு முழுவதும் இலக்கு பணிகள் மற்றும் முடிவுகள் அடையப்படுவதை உறுதி செய்வது பிரதான கணக்கீட்டு அதிலுவலர்கள் / கணக்கீட்டு அதிலுவலர்கள் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்களின் பொறுப்பாகும். குறிப்பாக மூலதன அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தொடர்ச்சியான பின்தொடர்தல் மற்றும் உடனடி திருத்த நடவடிக்கைகள் மூலம் வருடாந்த இலக்குகள் அடையப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

02.3 அனைத்து பிரதான கணக்கீட்டு அலுவலர்களும் தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட நிறுவனங்களின் நிதி நிர்வாகத்தின் போதுமான தன்மையை உறுதி செய்வதற்கு நிதி அமைச்சருக்குப் பொறுப்பாவார்கள். 2026 நிதியாண்டு தொடர்பான 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம் மற்றும் 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**03. 2026 ஆம் ஆண்டில் அரச செலவின முகாமைத்துவம்**

03.1 அனர்த்த சூழ்நிலையினால் சேதமடைந்த குளங்கள், கால்வாய்கள், நீர் வழங்கல் திட்டங்கள், பாதைகள், பாலங்கள், புகையிரதப் பாதைள், மருத்துவமனைகள், மருந்தகங்கள், பாடசாலைகள் மற்றும் கிராமிய / மாவட்ட மட்டத்தில் பொது சேவைகளை வழங்கும் கட்டிடங்கள் போன்ற அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்பதற்கு பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தற்போதுள்ள ஏற்பாடுகள் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

03.2 2025 ஆம் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட செலவினத் தலைப்பின் ஏற்பாடுகளை மற்றொரு செலவினத் தலைப்பிற்கு மாற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளின் இடைவிடாத பணிக்கு 2026 ஆம் ஆண்டுக்குத் தேவையான ஏற்பாடுகள் அத்தகைய ஒதுக்கீடுகள் ஏற்பாடுசெய்யப்பட்ட செலவினத் தலைப்பிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுவதனால் அந்தப் பணிகள் திட்டமிட்டபடி பூத்த்தி செய்யப்படும்.

03.3 அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அல்லது நடந்து கொண்டிருக்கும் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கடமைகளைத் தீர்ப்பதில் எழும் சிக்கல்களைக் கையாளளுதல், பெறுகை மட்டத்தில் பொருத்தமான தொழில்நுட்ப நிபுணத்துவம் கொண்ட சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். மேலும் அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் மற்றும் கணக்கீட்டு அதிகாரியின் அங்கீகாரத்துடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும்.

03.4 அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கும் சேதமடைந்த உட்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்பவும் 2026 ஆம் ஆண்டிற்குத் தேவையான ஏற்பாடுகளை திறைசேரி தனித்தனியாக வழங்கும்.

03.5 அரசாங்க செலவினக் கட்டுப்பாடு மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள பிற சுற்றறிக்கைகள் தொடர்பான விதிகளை விவரிக்கும் தேசிய வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கை இல. 01/2024 இலுள்ள செலவினக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின் விதிகள் தொடர்ந்து செல்லுபடியாகும்.

03.6 மதிப்பீட்டில் சேர்க்கப்படாத அல்லது வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் இல்லாமல் ஏற்படும் பொறுப்புளுக்கு திறைசேரி பொறுப்பல்ல என்பதால், அத்தகைய செலவுகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார்கள்.

03.7 ஒரு குறிப்பிட்ட அத்தியாவசிய விடயத்திற்கு மட்டும் மேலதிக ஏற்பாடுகள் கோரப்படும் சந்தர்ப்பங்களில், அத்தகைய கோரிக்கைகள் பிரதான கணக்கீட்டு அதிகாரியின் பரிந்துரையுடன் வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். மேலதி ஏற்பாடுகளுக்கான கோரிக்கைகள் அச்சிடப்பட்ட விரிவான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் – 2026 இன் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் / காரணங்களுக்கு மட்டுமே இருக்க வேண்டும்.

03.8 வைரெமென்ட் நடைமுறையின் கீழ், ஒதுக்கீட்டுப் பரிமாற்றங்கள் மிகவும் அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

03.9 மாகாண சபைகளுக்கான மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் மாகாண சபைகளின் வருமான மூலங்களையும் கருத்திற் கொண்டு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதால் அவற்றின் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து நிதி ஒதுக்கீடுகளைக் கோரும்போது மாகாண சபை நிதியை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

03.10 தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் தமது விடயப் பரப்பிற்குட்பட்ட விடயங்களை பிற அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் மூலம் மேற்கொள்ளும் போது, அப்பணியை நிறைவுசெய்வதற்குப் போதுமான நேரத்தை வழங்குவதற்கு தொடர்புடைய நிதியாண்டின் கடைசி காலாண்டிற்கு முன் நிதி பிரமாணக் குறிப்பு 208 இன் கீழ் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் செய்யப்படல் வேண்டும்.

## 04. 2026 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துதல்

04.1 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டுவிட்டதால், செலவின நிறுவனங்களின் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களை உடனடியாக செயற்படுத்துவதற்குத் தேவையான ஆரம்பப் பணிகள் மற்றும் திட்டமிடலினை தற்போதே ஆரம்பிக்கலாம்.

04.2 கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்துதல், கண்காணித்தல், முன்னேற்றத்தை மீளாய்வுசெய்தல், பின்தொடர்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றைச் செய்வதால், இது தொடர்பான தேவையான தகவல்களை பரிந்துரைக்கப்பட்ட படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல்களின்படி மாதந்தோறும் அத்திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

04.3 மூலதனத் திட்டங்கள் மற்றும் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துவதில் வருடாந்த இலக்குகளை அடைவதில் ஏதேனும் சாத்தியமான தடைகள் இருந்தால், பொது முதலீடு மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் உதவியைப் பெறுவதற்கு கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும்.

04.4 திறைசேரியுடன் தேவையான ஒருங்கிணைப்பைப் பேணுவதற்காக, ஒவ்வொரு பாரிய அபிவிருத்தித் திட்டம் மற்றும் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்குப் பொறுப்பாக ஒரு நிறைவேற்றுத் தர அலுவலரை பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் பரிந்துரைத்து, 2026.01.15 ஆந் திகதிக்குள் கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

## 05. முற்பணக் கணக்கு நடவடிக்கைகள்

05.1 2026 ஆம் ஆண்டிற்கான "முற்பண பி கணக்குகளுக்கான" அதிகபட்ச செலவு வரையறைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் மூலம் பண்டிகை முற்பணங்களின் அதிகரிப்பு மற்றும் அனர்த்த கடன் பெறும் வரையறையினை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

05.2 அதன்படி, 2026 ஆம் ஆண்டில் முற்பணக் கணக்குகளின் முகாமைத்துவம், ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்குள் நிர்வகிக்கப்படல் வேண்டும். ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் பரிந்துரைக்கப்பட்ட அதிகபட்ச செலவின வரையறைகளை மேலும் அதிகரிப்பதற்கான கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது. எனவே, தற்போதுள்ள வரையறைகளை மீறாமல் இருப்பதற்கும், ஆண்டு முழுவதும் கடன்கள் வழங்குவதற்கும் நிறுவனங்கள் பொருத்தமான முன்னுரிமை ஒழுங்கினைத் தயாரித்தல் வேண்டும்.

## 06. அரசாங்க நிறிவனங்களினால் செலவினங்களை மேற்கொள்ளல்

06.1 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 59(3) இன் படி, நியதிச்சட்ட சபைகளின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் மூலதனச் செலவினங்களை வழங்குவதற்கான விதிமுறைகள் உருவாக்கப்படும் வரை, நியதிச்சட்ட நிறுவனங்களால் மூலதனச் செலவினங்களைச் செய்வதற்கு நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துக்கான கோரிக்கைகள், தற்போது உள்ளது போல, மூலதனச் செலவினங்களைச் செய்வதற்கு முன் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்படும்.

06.2 மூலதனச் செலவினங்களுக்கான அங்கீகாரம் ஆண்டு முழுவதும் அவ்வப்போது திருத்தத்திற்கு உட்பட்டதல்ல என்பதால், நிறுவனங்களின் தாபிக்கப்பட்ட நோக்கங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட மூலதனத் திட்டங்கள் மட்டுமே மேற்கண்ட அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

06.3 அரச நிறுவனங்களின் உரிய அங்கீகாரத்துடன் செய்து கொள்ளப்பட்ட உறுதிமொழிகளுக்கான சம்பளம், அன்றாட தொழிற்பாட்டுச் செலவுகள் மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்கான மாதாந்த காசுத் தேவைகள், பரிந்துரைக்கப்பட்ட படிவங்களின் கீழ் பிரதான கணக்கீட்டு அதிகாரிகள் /கணக்கீட்டு அதிகாரிகளின் பரிந்துரைகளுடன் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு நேரடியாக அனுப்பப்படல் வேண்டும். அதன் பிரதிகள் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் அல்லது பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

06.4 வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் மூலம் நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டாலும், அந்த நிறுவனங்களின் வருமானம் தொழிற்பாட்டுச் செலவுகளைச் சமாளிக்கப் போதுமானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டுமே அவை அத்தகைய நிதிகளுக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் நிதி அல்லது வருமானம், சட்டப்பூர்வ விதிகளால் வைப்புத்தொகையாக வைத்திருக்க குறிப்பாக அங்கீகரிக்கப்படாவிட்டால், அவை திரட்டு நிதியில் வரவு வைக்கப்பட வேண்டும்.

**07. அரசாங்க நிறிவனங்களின் நிதி மூலம் செலவினங்களை மேற்கொள்ளல்**

07.1 நியதிச்சட்ட நிதியங்களிலிருந்து செலவுகளைச் செய்யும்போது, 01/2025 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2025.04.11 ஆந் திகதிய I/2025 (நிதி) ஆம் இலக்க சுற்றறிக்கை ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றல் வேண்டும்.

07.2 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம், அரச நிறுவனங்களில் நியதிச்சட்டமற்ற நிதிகளைப் பராமரிப்பதைக் கட்டுப்படுத்தியுள்ளதால், அந்த நிதிகளின் எதிர்கால முகாமைத்துவம் குறித்து அரசாங்க நிதித் திணைக்களத்தினால் ஏற்கனவே வழங்கப்பட்ட பரிந்துரைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

07.3 அரசாங்கப் பிணையங்கள் அல்லது இதே போன்ற சாதனங்களில் சட்டப்பூர்வ நிதியை முதலீடு செய்வதற்குப் பதிலாக, இந்த நிதிகள் அவை நிறுவப்பட்ட நோக்கங்களுக்கு இணங்க, துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**08. தெளிவுபடுத்தல்கள்**

இந்த சுற்றறிக்கை தொடர்பான தேவையான விபரங்களை பின்னிணைப்பு 01 இல் குறிப்பிட்டவாறு, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தில் உங்கள் அமைச்சு / திணைக்களம் / நிறுவனத்திற்குப் பொறுப்பான அதிகாரியிடமிருந்தோ அல்லது தேவைக்கேற்றவாறு திறைசேரி திணைக்களங்களிலிருந்தோ நேரடியாகப் பெறலாம்.

**ஒப்பம்/-**
**கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:
1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர், நிதி ஆணைக்குழு

## List of Officers in Charge of Operations in Budget Estimates of Ministry/Sector — 2026

| Ministry/Sector | In-Charge Officer Name | Designation | Phone No. | Email |
|---|---|---|---|---|
| Special Spending Units | Mr. Viraj Wijewardana | Director | 011-2484677 (Ext -1313) | wijewardhana.hrvp@nbd.treasury.gov.lk |
| Buddhasasana, Religious and Cultural Affairs | Ms. Sanjeewani Weerasekara | Director | 011-2484685 (Ext -1308) | weerasekara.wmsk@nbd.treasury.gov.lk |
| Finance, Planning and Economic Development | Mr. Nirmana Mohotty | Deputy Director | 011-2484740 (Ext -1115) | mohotty.mmmn@nbd.treasury.gov.lk |
| Defence | Ms. Lakshika Senarathna | Director | 011-2034429 (Ext -4346) | senarathna.pdlp@nbd.treasury.gov.lk |
| Justice and National Integration | Ms. Jayani Priyanka | Deputy Director | 011-2151456 (Ext -2027) | priyanka.thj@nbd.treasury.gov.lk |
| Health and Mass Media | Ms. Vidarshi Abeyratne | Deputy Director | 011-2484687 (Ext -1322) | abeyarathna.kmvv@nbd.treasury.gov.lk |
| Foreign Affairs, Foreign Employment and Tourism | Mr. Viraj Wijewardana | Director | 011-2484677 (Ext -1313) | wijewardhana.hrvp@nbd.treasury.gov.lk |
| Trade, Commerce, Food Security and Co-operative Development | Mr. Rasika wijekoon | Director | 011-2484690 (Ext -1324) | wijekoon.wmr@nbd.treasury.gov.lk |
| Ministry of Transport, Highways, and Urban Development | Mr. Prakrama Thennakoon | Director | 011-2484858 (Ext -1279) | thennakoon.tmdp@nbd.treasury.gov.lk |
| Agriculture, Livestock, Land and Irrigation | Ms. Nayana Thushari | Director | 011-2484760 (Ext -1326) | thusari.wan@nbd.treasury.gov.lk |
| Energy | Ms. Punya Rajapaksha | Director | 011-2484581 (Ext -1010) | rajapaksha.rap@nbd.treasury.gov.lk |
| Minister of Housing, Construction and Water Supply | Mr. Herath Banda | Director | 011-2484894 (Ext -1008) | banda.jmh@nbd.treasury.gov.lk |
| Rural Development, Social Security and Community Empowerment | Mr. Viraj Wijewardana | Director | 011-2484677 (Ext -1313) | wijewardhana.hrvp@nbd.treasury.gov.lk |
| General Education | Ms. Menaka Rajaguru | Director | 011-2034445 (Ext -2084) | rajaguru.rmsm@nbd.treasury.gov.lk |
| Higher Education and Vocational Education | Ms. Muditha Gunarathna | Deputy Director | 011-2034505 (Ext -1720) | gunasekara.gdmm@nbd.treasury.gov.lk |
| Public Administration, Provincial Councils and Local Government | Ms. Rangika Sandamali | Assistant Director | 011-2432848 (Ext -1774) | sandamali.hr@nbd.treasury.gov.lk |
| Plantation and Community Infrastructure | Ms. Nayana Thushari | Director | 011-2484760 (Ext -1326) | thusari.wan@nbd.treasury.gov.lk |
| Industry and Entrepreneurship Development | Mr. Rasika wijekoon | Director | 011-2484677 (Ext -1313) | wijewardhana.hrvp@nbd.treasury.gov.lk |
| Fisheries Aquatic and Ocean Resources | Mr. Suranga Kasun | Deputy Director | 011-2484684 (Ext -1319) | kasun.hds@nbd.treasury.gov.lk |
| Environment | Mr. Suranga Kasun | Deputy Director | 011-2484684 (Ext -1319) | kasun.hds@nbd.treasury.gov.lk |
| Women and Child Affairs | Mr. Sudarshana De Silva | Director | 011-2484668 (Ext -1316) | silva.ksm@nbd.treasury.gov.lk |
| Minister of Ports and Civil Aviation | Mr. Herath Banda | Director | 011-2484894 (Ext -1008) | banda.jmh@nbd.treasury.gov.lk |
| Digital Economy | Mr. Rasika wijekoon | Director | 011-2484690 (Ext -1324) | wijekoon.wmr@nbd.treasury.gov.lk |
| Public Security and Parliamentary Affairs | Mr. Kumara Senanayake | Director | 011-2151457 (Ext -2306) | senanayake.prk@nbd.treasury.gov.lk |
| Labour | Ms. Muditha Gunarathna | Deputy Director | 011-2034505 (Ext -1720) | gunasekara.gdmm@nbd.treasury.gov.lk |
| Youth Affairs and Sports | Mr. Sudarshana De Silva | Director | 011-2484668 (Ext -1316) | silva.ksm@nbd.treasury.gov.lk |
| Science and Technology | Ms. Jayani Priyanka | Deputy Director | 011-2151456 (Ext -2027) | priyanka.thj@nbd.treasury.gov.lk |
| Advance Account Activities | Mr. Kumara Senanayake | Director | 011-2151457 (Ext -2306) | senanayake.prk@nbd.treasury.gov.lk |
| Budget Process Management | Mr. Saman Senarathne | Director | 011-2484515 (Ext -1625) | senarathna.sc@nbd.treasury.gov.lk |